**DEPOSITION OF WITNESS**

**IN THE COURT OF CHIEF JUDICIAL MAGISTRATE,**

**DINDIGUL.**

**S.C. 60/2024**

**Prosecution Witness : 13**

| | | | | | |
|---|---|---|---|---|---|
| **Name** | : | **மரு. தவ்சிப் அகமது** | **Caste** | : | |
| **Father's Name** | : | **திரு. பசீர் அலி** | **Calling** | : | |
| **Village** | : | **ESI மருத்துவமனை** | **Religion** | : | **முஸ்லீம்** |
| **Taluk** | : | **ஒட்டன்சத்திரம், திண்டுக்கல்** | **Age** | : | **31** |
| | | | **Dated** | : | **29.04.2025** |

**இந்திய பிரமாண வகைமுறைச் சட்டம் 1969 ( பிரிவு 4)ன்படி சாட்சிக்கு சத்தியப் பிரமாணம் செய்யப்பட்டு பிரமாணத்தின் பேரில் சாட்சியின் வாக்குமூலம் பதிவு செய்யப் பட்டது**

**Accused present. Both side counsels present.**

அ.சா. 13 (பட்டியல் சாட்சி 17), மரு. **தவ்சிப் அகமது** ஆஜர். சத்தியப்பிரமாணம் செய்யப்பட்டு முதல் விசாரணை செய்யப்பட்டார்.

நான் தற்போது திண்டுக்கல், ஒட்டன் சத்திரம் ESI மருத்துவமனையில் உதவி மருத்துவராக பணி புரிகின்றேன். கடந்த 07.08.2023 ம் தேதி அன்று திண்டுக்கல் அரசு மருத்துவ கல்லூரி மருத்துவமனையில் சட்டம் சார்ந்த மருத்துவ துறையில் உதவி பேராசிரியராக பணியில் இருந்தபோது, கன்னிவாடி காவல்நிலைய ஆய்வாளரின் வேண்டுகோள் கடிதத்தின் அடிப்படையில் என்னிடம் மேற்படி காவல் நிலைய குற்ற எண். 151/2023 வழக்கில் இறந்துபோன சுமார் 32 வயதுடைய புகழ்நாதன் என்பவரின் பிரேதத்தை, பிரேத பரிசோதனை செய்தேன். மேற்படி பிரேதத்தை மேற்படி காவல் நிலைய காவலர் திருமதி. சுகன்யா அவர்கள் அடையாளம் காட்டினார். நான்

அன்றை தினம் காலை 11.30 மணியில் இருந்து 12.45 வரை பிரேத பரிசோதனை செய்தேன்.

**<u>பிரேதத்தின் மீது காணப்பட்ட ஆடைகள்.</u>**

1) வெள்ளை நிற பனியன், அதில் 2 x 1 cm அளவில் மார்பின் முன் பகுதியில் கிழிந்து காணப்பட்டது மற்றும் 1.8 x 0.5 cm அளவில் இரத்தக் கறை முதுகுப் பகுதியில் காணப்பட்டது.

2) பழுப்பு, சிவப்பு, ஊதா மற்றும் வெள்ளை நிற கட்டம் போட்ட கைலி

3) பச்சை நிற பாக்கெட்டுடன் கூடிய உள்ளாடை, அதில் VIS WAK என்ற அச்சிடப்பட்டு இருந்தது.

4) உடல் மருத்துவமனையின் போர்வையால் போர்த்தப்பட்டு இருந்தது.

**<u>வெளிப்புற பிரேத பரிசோதனை :</u>**

இறந்த நபர் மிதமான உடல் வாகுடன் காணப்பட்டார். கை மற்றும் கால் நகங்கள் வெளிறி காணப்பட்டது. மரண விறைப்பு உடலின் கீழ் பகுதியில் காணப்பட்டது.

**<u>உடலின் மீது காணப்பட்ட காயங்கள்</u>**

1) 0.5 x 0.5 cm அளவில் சிவந்த சிராய்ப்பு காயம், வலது கால் முட்டியின் முன் பகுதியின் கீழ்ப்புறத்தில் காணப்பட்டது.

2) 1x 0.3 cm மற்றும் 1 x 0.4 cm அளவில் சிவந்த சிராய்ப்பு காயம் இடது கால் முட்டியின் உட்புறத்தின் கீழ் பகுதியில் காணப்பட்டது.

3) 1 x 0.8 cm அளவில் சிவந்த சிராய்ப்பு காயம் இடது கால் முட்டியின் முன்புறத்தின் மத்தியில் காணப்பட்டது.

4) 0.5 x 0.3 cm அளவில் சிவந்த சிராய்ப்பு காயம் இடது கால் முட்டியின் முன்புறத்தின் மத்தியில் காணப்பட்டது.

5) 0.5 x 0.3 cm அளவில் சிவந்த சிராய்ப்பு காயம் இடது கால் முட்டியின் முன்புறத்தின் கீழ்பகுதியில் காணப்பட்டது.

6) 0.5 x 0.5 cm அளவில் சிவந்த சிராய்ப்பு காயம் இடது கால் முட்டியின் வெளிப்புறத்தின் மத்தியில் காணப்பட்டது.

7) 0.5 x 0.3 x 0.3 cm அளவில் சிவந்த கண்றிய காயம் கீழ் உதட்டின் உட்புறத்தின் வலது பகுதியில் காணப்பட்டது.

8) 0.3 x 0.1 x 0.1 cm அளவில் கிழிந்த காயம் கீழ் உதட்டின்உட்புறத்தின் வலது பகுதியில் காணப்பட்டது.

9) தலையை கூறாய்வு செய்து பார்த்தபோது 9 x 8 – 6cm x தலையின் தோல் ஆழம் வரை உடைய அடர் சிவப்பு கண்றிய காயம் வலது உச்சந்தலை மற்றும் வலது காதின் மேற்பகுதியில் காணப்பட்டது. வலது Temporalis தசை கண்றிய காயத்துடன் காணப்பட்டது. தலையின் கபாலத்தில் 7 cm அளவில் உடைந்து முறிவு ஏற்பட்டு, வலது Parietal மற்றும் தலையின் பின்பகுதியில் உள்ள எலும்பிலும் காணப்பட்டது. 5.2 cm அளிவல் வலது temporalis எலும்பு உடைந்து முறிவு ஏற்பட்டு காணப்பட்டது. மூளையின் உறையில் 1.5 cm அளவில் வலது பக்கத்தில் கிழிந்து காணப்பட்டது. வலது பக்க பெருமூளையில் இரத்த கசிவு ஏற்பட்டு, மூளை வீக்கம் அடைந்து காணப்பட்டது. கபாலத்தின் அடிப்பகுதி சீராக இருந்தது.

மேலும், உடலின் உட்புறபகுதியை கூறாய்வு செய்து பார்த்தபோது, மாப்பு பகுதிகள் சிராக இருந்தது. வயிற்றை கூறாய்வு செய்து பார்த்தபோது சீராக இருந்தது. உணவுப் பையில் 110 கி அளவிளான பாதி செறிமானமான உணவுப் பொருள் எந்த நெடியும் இன்றி காணப்பட்டது. கழுத்து பகுதியை கூறாய்வு செய்து பார்த்ததில் சீராக இருந்தது.

இரத்தம் மற்றும் உடல் உறுப்புகள் சேகரிக்கப்பட்டு இராசாயன பரிசோதனைக்காக மற்றும் மருத்துவ துணியின் இரத்த மாதிரிகள் சேகரிக்கப்பட்டு இரத்த வகை பரிசோதனைக்காக மேற்கூறிய காவலர்

மூலம் மதுரை வட்டார தடய அறிவியல் ஆய்வகத்திற்கு அனுப்பி வைத்தேன்.

**கருத்து :**

இறந்த நபர் அவருக்கு தலையில் ஏற்பட்ட காயத்தால், இறந்து இருக்க கூடும் என்றும், மேற்கூறிய காயங்கள் அனைத்தும், இறப்பிற்கு முந்திய காயங்கள் என்றும், காயம் எண். 9 இறந்த நபருக்கு, இறப்பை ஏற்படுத்த போதுமானது என்றும், மேற்கூறிய காயங்கள் அனைத்தும் மழுங்கிய ஆயுதத்தால் அல்லது பலமான தாக்குதலால் ஏற்பட வாய்ப்பு உள்ளது என்றும், இறந்த நபர் பிரேத பரிசோதனை செய்வதற்கு முன்பு 24 மணி நேரம் முதல் 36 மணி நேரத்திற்குள் இறந்து இருக்ககூடும் என்று தற்காலிக கருத்துடன் நான் வழங்கிய பிரேத பரிசோதனை அறிக்கையை வழங்கினேன். அது Ex. P11.

கடந்த 11.09.2023 அன்று மதுரை வட்டார தடய அறிவியல் ஆய்வகத்தில் இருந்து பெறப்பட்ட இரசாயன பரிசோதனை அறிக்கையில் பரிசோதனை செய்யப்பட்ட உள்ளுறுப்புகளை பொறுத்து அதில் எந்த விதமான நச்சுப் பொருட்களும் காணப்படவில்லை என அறிக்கை வந்தது. எனவே மேற்கூறிய தற்காலிக கருத்தையே இறுதி கருத்தாக வழங்கி, இறுதி அறிக்கை வழங்கினேன். அது Ex. P12. மதுரை வட்டார தடய அறிவியல் ஆய்வகத்தில் இருந்து பெறப்பட்ட இறந்து போன நபரின் உள்ளுறுப்புகளின் பரிசோதனை அறிக்கை Ex. P13.

மேலும் 07.08.2023ம் தேதி அன்று நான் பணியில் இருந்தபோது கன்னிவாடி காவல் நிலைய ஆய்வாளர் அவர்கள் இறந்த நபரின் இறப்பு சம்மந்தமாக விளக்கங்களுக்காக சில கேள்விகளை கேட்டு இருந்தார். அதற்கான பதிலை வழங்கி இருந்தேன். அதற்கான ஆவணம் Ex. P14. போலீசார் என்னை விசாரித்தனர்.

**<u>எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை:-</u>**

இறந்துபோன நபரின் உடல் குளிர் சாதன அறையில் உள்ள பெட்டியில் வைக்கப்பட்டு இருந்ததால், இறந்த நேரம் குறித்து பிரேதத்தின் ஆசன வாயில் தெர்மாமீட்டர் வைத்து பார்க்கவில்லை. இறந்துபோன நபரின் இறந்து போன நேரம் இரண்டு மணி நேரம் முன் பின்னாக இருக்க வாய்ப்பு உள்ளதா என்றால், பிரேத பரிசோதனை செய்வதற்கு முன்பு 24 மணி நேரத்தில் இருந்து 36 மணி நேரத்திற்குள் இருக்கும். அதற்கு மாறி இருக்க வாய்ப்பு இல்லை. இறந்துபோன நபருக்கு தலையில் வெளிப்புற காயம் எதுவும் இல்லை என்றால் சரியல்ல. உயர் இரத்த அழுத்தம் உள்ளவர்களுக்கு, அதனால் இரத்த கட்டு மூளையில் ஏற்படுமா என்றால், மூளையின் உட்புறத்தில் ஏற்படும். பெருமூளையின் வெளிப்புறத்தில் ஏற்பட வாய்ப்பு இல்லை. மூளையின் கீழ் பகுதியில் காயம் இல்லை. பிரேத பரிசோதனையில் கூறப்பட்டு உள்ள காயம் எண். 1 கையினால் மற்றும் நகத்தால் அழுத்தும் போது ஏற்பட வாய்ப்பு இல்லை. கடுமையான பொருட்கள் மீது மோதினால் ஏற்படுமா என்றால் சமமற்ற பகுதியின் மீது மோதிய உராய்வினால் ஏற்பட வாய்ப்பு உள்ளது.

பிரேத பரிசோதனையில் கூறப்பட்டு உள்ள காயம் எண். 7 மற்றும் 8 நகக் கிரலால் ஏற்பட வாய்ப்பு உள்ளதா என்றால், பல்லில் குத்தியதால் ஏற்பட வாய்ப்பு உள்ளது. பிரேத பரிசோதனையில் கூறப்பட்டு உள்ள காயம் எண். 1 முதல் 8 வரை ஒருவர் தடுமாறி அதிக விசையுடன் குட்புற கீழே விழுந்தால் ஏற்பட வாய்ப்பு உள்ளதா என்றால், வாய்ப்பு இல்லை. பிரேத பரிசோதனையில் கூறப்பட்டு உள்ள காயம் எண். 1 முதல் 8 வரை ஒரு உயரமான பகுதியில் இருந்து கரடு முரடான பகுதியில் மோதுவதால் ஏற்பட வாய்ப்பு உள்ளதா என்றால், வாய்ப்பு இல்லை. பிரேத பரிசோதனையில் கூறப்பட்டு உள்ள காயம் எண். 1 முதல் 8 வரை

இருசக்கர வாகத்தில் சென்று கீழே விழுவதால் வாய்ப்பு உள்ளதா என்றால், வாய்ப்பு இல்லை. பிரேத பரிசோதனையில் கூறப்பட்டு உள்ள காயம் எண். 9 தலையை கதவில் அதிக விசையுடன் முட்டுவதால் ஏற்பட வாய்ப்பு உள்ளதா என்றால், வாய்ப்பு உள்ளது. போலீசார் கேட்டுக் கொண்டதற்கு இணங்க சரியாக பரிசோதனை செய்யாமல் அறிக்கை வழங்கினேன் என்றால் சரியல்ல.

R KANAGARAJ

Digitally signed by R KANAGARAJ
Date: 2025.05.20 18:25:51 +0530